**சென்னை–6, தொழிலாளர் துணை ஆணையர் (பணிக்குழு மற்றும் பொது) அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: திரு. தே. விமலநாதன், எம்.ஏ., டி.எல்.எல். & ஏ.எல்.,**

**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – செல்வி கோ. ஹேமலதா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை அரசால் ஆணையிடப்பட்டது – தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஜி3/37835/2023

நாள்: 23.05.2024

படிக்கப்பட்டது

1. அரசாணை (3டி) எண்.08, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (இ2) துறை, நாள்: 13.05.2024.
2. தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்புவிதிகள், விதி 34 (a) உடன் பிற்சேர்க்கை V.

-----------

**ஆணை:**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணை மூலம் சென்னை, ஆணையர் அலுவலகத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வரும் செல்வி கோ. ஹேமலதா என்பவரின் பணியினை 06.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, அன்னாரை 06.10.2022 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், அன்னார் பணியில் சேர்ந்த 06.10.2022 முற்பகல் முதல் தொடங்கும் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இக்காலத்தில் அன்னார் பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்ய வேண்டும் என்றும், அன்னாரின் பணி, முன் தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், அவற்றினை நடைமுறையில் உள்ள விதிகளின்படி, பெறத்

தகுதியுடையவராகிறார் என்றும் அரசாணையின்படி உத்தரவிடப்படுகிறது. இதனால் எழும் நிலுவைத் தொகையினை அன்னாருக்கு பெற்று வழங்க இவ்வலுவலக நிர்வாக அலுவலர் (குறைந்தபட்ச ஊதியம்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/- தே. விமலநாதன்,
தொழிலாளர் துணை ஆணையர்
(பணிக்குழு மற்றும் பொது (கூ,பொ).

பெறுநர்

செல்வி கோ. ஹேமலதா,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

நகல்:

1. சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை.
2. நிர்வாக அலுவலர் (குறைந்தபட்ச ஊதியம்), இவ்வலுவலகம்.
3. இவ்வலுவலக 'ஆர்' பிரிவு மற்றும் 'ஜி4' இருக்கை.

//அனுப்பப்படுகிறது//

23.5.24
தொழிலாளர் துணை ஆணையருக்காக
(பணிக்குழு மற்றும் பொது)

23.05.2024

**<u>சுருக்கம்</u>**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொழிலாளர் துறை – செல்வி கோ.ஹேமலதா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (இ2) துறை**

அரசாணை (3டி) எண்.08

நாள் : 13.05.2024
குரோதி வருடம், சித்திரை– 30
திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்க:

1. தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண். ஜி3/20443/2021, நாள் 03.10.2022
2. தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ஜி3/37835/2023, நாள் 10.02.2024.
3. அரசு கடித எண்.3248/A2/2023–1, மனிதவள மேலாண்மைத் (ஏ) துறை, நாள் 07.09.2023.

------

ஆணை :

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணையில், காலஞ்சென்ற திரு.ந.கோபால், தேர்வு நிலை பதிவறை எழுத்தர், தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை என்பவரின் மகள் செல்வி கோ.ஹேமலதா என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது என்றும், தனியர் 06.10.2022 அன்று முற்பகல் முதல் சென்னை தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளின்படி இப்பணியிடத்திற்கு தேவையான வயது மற்றும் கல்வித் தகுதிகளை தனியர் பெற்றுள்ளார் என்றும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கான அனைத்து தகுதிகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்து, தனியரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 06.10.2022 அன்று பிற்பகல் முதல் பணிவரன்முறை

செய்து ஆணை வழங்குமாறு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ந.கோபால், தேர்வு நிலை பதிவறை எழுத்தர் என்பவரின் மகள் செல்வி கோ.ஹேமலதா என்பவரை, தொழிலாளர் துறையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பணியிடத்தில், அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 06.10.2022 அன்று முற்பகல் முதல், பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-ல் கண்டவாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற நடைமுறையில் உள்ள விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை அரசு கடித எண்.3248/A2/2023-1, மனித வள மேலாண்மைத் (ஏ) துறை, நாள் 07.09.2023-ன்படி அத்துறையின் ஒப்புதல் பெற அவசியமில்லை.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
முதன்மைச்செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை-6.
செல்வி கோ.ஹேமலதா, இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை -6.
(முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை -6 வழியாக)

நகல்:
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அநமு.2) துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
சுத்த நகல் கோப்பிற்கு (2462/இ2/2024)
இருப்புக் கோப்பு / உதிரிநகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**
13/5/2024
13/5/24